செய்தி வெளியீடு எண்.526 நாள்– 24.8.2009

## தமிழ் வளர்ச்சித் துறை.

## கணியன் பூங்குன்றனார் பரிசு

“கணினி யுகத்திற்கேற்பத் தமிழ் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, ஆண்டுதோறும் வெளிவரும் தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருள் ஒன்றைத் தெரிவு செய்து அதனை உருவாக்கியவருக்குக் கணியன் பூங்குன்றனார் பெயரில் பரிசுத் தொகை ரூ.1,00,000/- வழங்குவதுடன் அந்த நிறுவனத்திற்குப் பாராட்டிதழும் வழங்கப்படும்.’’ 2009-10-ஆம் ஆண்டிற்கான பரிசுக்குரிய விண்ணப்பங்கள் 14.8.2009–க்குள் வந்து சேர வேண்டு என அறிவிக்கப்பட்டது. இப்பரிசுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் பெறும் நாள் 15.9.2009 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

### பதிவு செய்வதற்கான விதிமுறைகள்:

1. தமிழ் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட மென்–பொருளாக இருத்தல் வேண்டும். மென்பொருள் கடந்த மூன்றாண்டுக் காலத்திற்குள் (2006, 2007, 2008) தயாரிக்கப் பட்டிருக்க வேண்டும்.

2. மென்பொருள் தனி ஒருவராலோ, கூட்டு முயற்சியாலோ, நிறுவனத்தாலோ உருவாக்கப்பட்டிருக்கலாம். கூட்டு முயற்சி எனில் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

3. இப்போட்டியில் கலந்து கொள்ள, பதிவுக் கட்டணமாக ரூ.100/- தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் பணமாகச் செலுத்தப்படலாம். அல்லது கேட்பு வரைவோலையாக “The Director of Tamil Development (I/C), Chennai’’ - payable at Chennai’’ என்ற பதவிப் பெயரில் அனுப்பி வைக்கலாம். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 15 .9. 2009–க்குள் வந்து சேர வேண்டும்.

பதிவு செய்வதற்கும், பரிசுப் போட்டியில் கலந்து கொள்வதற்கும் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொ),
தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை–600 008.
தொலைபேசி எண்.044-28190412, 28190413

தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொ)

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.